
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 12

ஜுன் -1999

இதழ் - 6

"ஆதியிலே தேவன் வானத்தையும்,
பூமியையும் சிருஷ்டித்தார்." ஆதி. 1:1


*வெளியிடுவோர்*

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

**தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701**

**தமிழ்நாடு, இந்தியா.**

## அரிய வாய்ப்பு

திருமறை ஆசான் மாத இதழின் நிறுவன ஆசிரியர் சகோ. E.Z. செல்வநாயகம் அவர்கள் பல்வேறு தலைப்புகளின் கீழாக எளிய நடையில் எழுதி, அநேகர் பயன் பெற்ற 40க்கும் அதிகமான கட்டுரைகளைத் தொகுத்து "ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

தரமான தாளில் அச்சிடப்பட்டு, நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, அழகிய தோற்றமுடையதாய் வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூல் சுமார் 250 பக்கங்களைக் கொண்டது.

சத்தியம் விரும்பிகள் அனைவருக்கும் நிறைந்த பயனைத் தரக் கூடியது. தபாலில் பெற விரும்புவோர் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 25/– மாத்திரமே.

முகவரி : தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
தபால் பெட்டி எண் 27, காங்கயம் – 638 701.

குறிப்பு : தயவு செய்து M.O. கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

## ஆசானின் அறிவுரையிலே...

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பவுலின் மீதிப் பயணத்திலிருந்து | 1 |
| 2. | வேத பாட வகுப்புகள் | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 20 |
| 5. | வெளிப்படுத்தின விசேஷம் [பின்னணி (பாகம் -2)] | 23 |
| 6. | வாலிபர் பகுதி | 27 |
| 7. | இயேசுவின் நாமம் | 31 |

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 12 JUNE -1999 Issue -6

**ஆசிரியவுரை**

# பவுலின் மீதிப் பயணத்திலிருந்து...

அப்போஸ்தலன் பவுல் மேற்கொண்ட, வேதாகமச் சிறப்பு மிக்க ரோமப் பயணத்திலிருந்து நமக்குத் தேவையான சில பாடங்களைக் கற்றுக் கொள்ள விரும்பி, பவுலோடு சேர்ந்து நாமும் பயணத்தை கடந்த மாதம் தொடங்கினோம். ஆனால், பிரயாண தூரம் அதிகமாயிருந்து பயணம் நீண்டுவிட்டபடியாலும், பயண அனுபவங்கள், நமது இதழின் அதிகமான பக்கங்களை ஆக்கிரமித்துக் கொண்டபடியாலும், தொலைதூரப் பயணம் படிப்போருக்குக் களைப்பை ஏற்படுத்தக் கூடுமென்று நாம் அஞ்சியதாலும், அத்தோடு நமது பயணத்தில் ஒரு அபாய கட்டம் எதிர்பட்டபடியாலும், பயணத்தைப் பாதியிலேயே நிறுத்தி, அதுவரைக்குமான பயணத்திலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொண்டோம்.

ஆனால், திட்டமிட்டபடி பவுலை ரோமாபுரி மட்டும் கொண்டுபோய்ச் சேர்க்க நாம் விரும்புவதாலும், பயணத்தைப் பாதியிலே நிறுத்தி மீண்டும் தொடங்குவது நமக்குப் பழக்கப்பட்ட ஒன்றாக இருப்பதாலும், எஞ்சியுள்ள பயணத்திலிருந்து என்ன பாடங்கள் கிடைக்குமென்று நீங்கள் ஆவலோடு எதிர்பார்ப்பதாலும், மீதிப் பயணத்தையும் நாம் தொடர்ந்து மேற்கொண்டு தேவன் நமக்கு வெளிப்படுத்த இருக்கும் எஞ்சிய பாடங்களையும் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

அதற்கு முன்பாக, மீதிப் பயணத்தின் பின்னணியைக் கொஞ்சம் பார்த்துவிடுவோம்.

நமது கப்பல் "யூரோக்கிலிதோன்" என்னும் கடுங்காற்றுக்குள் சிக்கி, சீரழிந்து கொண்டிருக்கும் போது, பவுல் அவர்கள் நடுவே நின்று, கடந்த இரவிலே கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினபடி அவர்களை திடப்படுத்தி, "எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்" என்று சொன்னான் என்பதோடு கடந்த மாதம் நமது பயணத்தை நிறுத்தினோம். (அப். 27:25)

ஆனால், மகிமையான தேவனின் வல்லமையான வார்த்தைகளைக் கேட்டுப் பழக்கமில்லாத, விசுவாசித்தறியாத கப்பலாட்கள், தங்களின் அனுபவக் கணக்குப்படியும், குறைமதியின் கணிப்புப்படியும் இனித் தப்பிப் பிழைக்கவாய்ப்பில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டு, கப்பலைப் பாதுகாக்க நங்கூரம் பாய்ச்ச பிரயாசப்படுகிறவர்கள் போல பாசாங்கு செய்து, கடலில் குதித்து, நீந்தித் தப்பிக்க எத்தனிக்கையில், பவுல் நூற்றுக்கதிபதியையும், சேவகரையும் நோக்கி, **இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்று எச்சரித்தான் (அப். 27 : 31).** அதன்படி அவர்கள் தப்பிப் போகாதபடி சில தடுப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. பவுல் ஏற்கனவே சொன்னது போலவும் அவன் தேவனிடத்தில் வைத்த நம்பிக்கையின் படியும், கப்பலிலிருந்த 276 பேரின் உயிருக்கும் எந்தச் சேதமும் வராமல், அதே சமயம் ஆச்சுப் போச்சு என்று கரைசேர்ந்து, அந்தத் தீவு மெலித்தா என்று கண்டார்கள் (அப். 28 : 1).

பிறகு அந்தத் தீவார் இவர்களை அன்போடு ஏற்றுக்கொண்டு, இவர்களுக்கு முதலுதவி செய்யும்படியாய் நெருப்பை மூட்டி அனலூட்டினர். அப்பொழுது குளிர்காய பவுல் சில விறகுகளைப் பொறுக்கி, அதிக சூடுண்டாக்கும்படி நெருப்பின் மீது போடுகையில், ஒரு விரியன் பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக் கொண்டது. (அப். 28 : 4). **"விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை. இவன் சமுத்திரத்துக்குத் தப்பி வந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு அல்லது சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்**

கொண்டிருந்தார்கள். நெடுநேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக் கொண்டார்கள்". (28 : 4 6). மனிதனின் இந்தப் பாழும் மனம் எவ்வளவு சலனப் புத்தியுள்ளதென்று பாருங்கள்.

பிறகு, அந்த தீவில் சில காலம் தங்கியிருந்து, தீவின் முதலாளி உட்பட அன்னவரின் அன்பையும், மரியாதையையும் பெற்று, சீரகூசா, புத்தேயோலி பட்டணங்கள் வழியாக ரோமபுரி சென்றடைந்தார்கள். (அப். 28 : 14). அங்கே பவுல் வருகிறார் என்ற செய்தி கிடைத்தவுடன், சகோதரர்கள் இரண்டு குழுவாகச் சென்று சிலர் அப்பியுபுரம் வரைக்கும், சிலர் மூன்று சத்திரம் வரைக்கும் சென்று வரவேற்றார்கள். இந்த இரண்டு இடங்களும் ரோமாபுரியிலிருந்து முறையே சுமார் 43, 33, மைல்கள் தூரத்திலிருந்தது. ". . . . . அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்தரித்துத் தைரியமடைந்தான்" (28 : 15). சகோதர அன்பு எவ்வளவு நன்மையைத் தருகிறது பாருங்கள்!.

சரி, பவுல் ரோமாபுரி வந்து சேர்ந்து, தன் காரியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு மூன்று நாளை மாத்திரம் எடுத்துக் கொண்ட பிறகு, **யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்து, . . . இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன் என்று தெளிவுபடுத்தினான்.** (28 : 17 - 20) மேலும் சில காரியங்களை அவனிடத்தில் திட்டமாய்த் தெரிந்து கொள்ள விரும்பி, ". . . . ஒரு நாளைக் குறித்து, அநேகம் பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். அவன் காலமே தொடங்கி சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்" (28 : 30, 31) என்று கூறுகின்றது.

இதற்குப் பிறகு, இந்த அப்போஸ்தலனுக்கு என்ன நேர்ந்தது என்று நமக்கு சொல்லப்படவில்லை. இது குறித்து வேதாகமம் மௌனம் சாதிக்கிறபடியால், மாந்த அறிவின்படியான கருத்துக்கள் பல உண்டு. ஆனால், அது நமக்கு அவசியமில்லையென்பதாலும், நமது திட்டப்படி, பவுலை ரோமாபுரி கொண்டு போய்ச் சேர்த்துவிட்டபடியாலும், இங்கே தானே நாம் நிறுத்திக் கொண்டு, மீதிப் பயணத்திலிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்வோம்.

## I. கப்பலில் இருந்தால் தான் காக்கப்படுவீர்கள்

ரோமாபுரிக்கான மீதிப் பயணம் தரும் முதல் பாடம், கப்பலிலுள்ளவர்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால், கப்பலிலேயே இருக்க வேண்டுமென்பது.

பதினான்கு நாட்களாக கப்பல் அலைக்கழிக்கப்பட்டு, ஒருவகையாக கரைசேரும் கட்டத்தை நெருங்கினது. (அப். 27 : 27). ஆனால், **"ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கவில்லையென்பது போல"** கப்பலாட்கள் பொறுமையிழந்து, தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையும் இழந்து, கப்பலை விட்டோடிப்போக முயற்சித்தனர். (27 : 30). அப்பொழுது தான் பவுலடியார், நூற்றுக்கதிபதியையும், சேவகரையும் நோக்கி : **"இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்றான்"** ( அப் 27 : 31).

இங்கே நாம் ஒன்றைக் கவனிப்பது அவசியம். கப்பலிலிருந்தவர்களின் இரட்சிப்புக்கு, அதாவது அவர்கள் காக்கப்படுவதற்கு நிபந்தனை கொடுக்கப்பட்டிருந்தது. அந்த நிபந்தனை மீறப்படுமானால் அவர்கள் இரட்சிக்கபடுவதில்லை. ஆகவே தான் பவுல், கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்று எச்சரிக்க வேண்டியதாயிருந்தது.

இந்த எச்சரிப்பு நமக்குத் தரும் ஒரு முக்கிய பாடம் என்னவெனில், இரட்சிக்கப்படும் எல்லோரும் பரலோகம் சென்றுவிட முடியாதென்பது. பரலோகம் செல்வதற்கு முதலாவது ஒருவன் வேத வசனங்களின்படியாக, விசுவாசித்து (மாற். 16 : 16) மனந்திரும்பி (அப். 2 : 38) அறிக்கையிட்டு (ரோமர். 10 : 10) ஞானஸ்நானம் பெற்று (அப். 22 : 16) இரட்சிப்புக்குள் வரவேண்டும். அப்பொழுது இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் தமது சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப். 2 : 47). அப்படி சபைக்குள் வருகிறவர்கள், இறுதிவரை அந்த ஒரே சபைக்குள்ளாக நிலைத்திருந்தால் தான் பரலோகம் செல்லமுடியும். இரட்சிப்பு என்பது எப்பொழுதும் நிபந்தனையுடன் கூடியதே. இதை நாம் மறவாமல் மனதில் கொள்வது அவசியம்.

ஆனால், இந்த உண்மைக்கு மாறாக, கிறிஸ்து கட்டின ஒரே சபைக்குள் வராமலேயே இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும், பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திராமலேயே பரலோக பாக்கியம் கிடைக்குமென்றும், நம்புகின்றனர். போதிக்கவும் செய்கின்றனர். நிச்சயமாக அப்படியில்லை. இக்கருத்துக்கு வலு சேர்க்கும் பல உதாரணங்கள் வேதாகமத்தில் உண்டு. நோவாவும் அவன்

குடும்பமும் தேவன் சொன்னபடியெல்லாம் செய்து, **பேழைக்குள் இருந்தபடியால்** தான் இரட்சிக்கப்பட்டார்கள். (ஆதி. 6) பேழைக்கு வெளியே இருந்திருந்தால் அவர்களும் அழிக்கப்பட்டிருப்பார்கள். எகிப்திலிருந்த இஸ்ரவேலர், தேவன் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்பட்ட **வீட்டிற்குள் இருந்தபடியால் தான்**, சங்காரத் தூதனிடமிருந்து தப்பிக்க முடிந்தது. (யாத். 12 : 21 - 22) வீட்டிற்கு வெளியே இருந்தவர்கள் அழிவின் நாளில் காக்கப்படவில்லை. ஆகையால், அருமையானவர்களே! இறுதி நாளில் நாம் காக்கப்படுவதற்கு இரட்சிப்பு என்ற கப்பலை, கிறிஸ்துவின் ஒரே சபை என்ற கப்பலை விட்டு வெளியே வராமல், அவைகளுக்குள் நிலைத்திருப்போமாக!

## II. மனிதன் மாறும் இயல்பு கொண்டவன்

மீதிப்பயணம் தருகின்ற இரண்டாவது பாடம், மனிதன் தன் வழிகளில் நிலையற்றவனாக இருக்கிறான் என்பது. ஆகவே தான் வேதாகமம் நாசியிலே சுவாசம் உள்ள மனிதனை நம்ப வேண்டாம் என்று சொல்கிறது.

கப்பல் யாத்திரை செய்தவர்கள், மெலித்தா தீவுக்கு வந்தபோது, அந்தத் தீவார் அவர்கள் மீது அன்பு பாராட்டி அவர்களின் குளிருக்காகவும், நனைந்திருந்த அவர்கள் உடைகள் உலரும்படியாகவும் நெருப்பை மூட்டினர். அச்சமயத்தில், கொடிய விஷமுள்ள ஒரு விரியன் பாம்பு, பவுலுடைய கையை கவ்விக் கொண்டது. விரியனின் வீரியத்தை நம் ஊரார் அறிந்து, "விதி வந்தால் தான் விரியன் தீண்டும்" என்று சொல்வது போல், அத்தீவாரும் பவுலுக்கு முடிவு வந்துவிட்டது என்று உண்மையாகவே நம்பினர். அது மாத்திரமல்ல, அவர்களால், விசாரணையின்றி, "**கொலை பாதகன்**" என்று ஏகமனதாக தீர்ப்பளிக்கப்பட்டான். (28 : 4). ஆனால், அதே மனிதர்கள் அவனுக்கு ஒன்றும் நேராத போது வேறு சிந்தையாகி "**இவன் தேவன்**" என்று சொன்னார்கள். சில மணி நேரத்துக்கு முன்பாக கொலைபாதகனாக இருந்தவன். அதற்குள்ளாக தேவனாக மாறிவிட்டான். அட, மனிதா! மனிதா!!

மனிதனின் இந்த மாறும் இயல்புக்கு எடுத்துக்காட்டுகள் பல வேதத்தில் உண்டு. உதாரணத்திற்கு கலாத்திய பட்டணத்து மக்களை கவனித்துப் பாருங்கள். பவுலாலே நற்செய்தி அறிவிக்கப்பட்டபோது, அதை மிகுந்த தாகத்தோடும், மனவிருப்பத்தோடும் ஏற்றுக்கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று மகிழ்ச்சியோடு கூறி, கிறிஸ்தவத்தில்

திளைத்திருந்தனர். ஆனால், யூதர்கள் அவர்களிடம் வந்து, அய்யய்யோ, மோசேயின் பிரமாணத்தை விட்டுப் போய்விட்டீர்களே என்றபோது, மீண்டும் தலை கீழாகத் திரும்பிவிட்டனர். (கலா. 1 : 6 - 12).

கர்த்தரைப் பின்பற்றுகிற மக்களும் கூட இந்தவிதமாகவே, இருக்கிறார்கள் என்பது வேதனையான ஒன்று. எதற்காக ஒன்றை நம்புகிறோம் அல்லது எதற்காக ஒன்றை ஏற்றுக் கொள்கிறோம் என்பது தெரியாமலும், புரியாமலும் செய்துவிட்டு, காரியங்கள் தாங்கள் எதிர்பார்க்கிறபடியும், தாங்கள் விரும்புகிறபடியும் போகாதபொழுது, உடனே, அந்தர் பல்டி அடித்து விடுவது. இயேசுவின் நாட்களிலும், இந்த மனிதன் அப்படித்தான் இருந்தான். திரள், திரளாகப் பின் சென்றனர். ஆனால், நமதாண்டவர் தன்னைப் பின்பற்றுகிறவர்கள், அறிந்து கொள்ள வேண்டியதைப் போதித்த போது, **"இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்"** (யோ. 6 : 60) என்று சொல்லி பின் வாங்கினர்.

ஒருவேளை மனிதன் மாறும் இயல்புடையவனாக இருக்கலாம். ஆனால், கிறிஸ்தவன் ஒருபோதும் அப்படி இருக்கக் கூடாது. அப்படியிருந்த கிறிஸ்தவர்கள் தேவனால், வேதாகமத்தால் கடிந்து கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (1 தீமோ. 1 : 20). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள், கடுமையான கொடுமைகளுக்கு மத்தியிலும் தேவனுக்கு உண்மையாக இருந்தனர். வேத வசனங்களின் முழு ஆதாரங்களினடிப்படையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் அவர்களைப்போல் இருக்க வேண்டும். அப்போஸ்தலன் பவுல், கொரிந்தியர்களுக்கு எழுதும்போது, அப்படி இருக்க வேண்டுமென்று தான் எழுதுகிறார். **"ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிறவர்களாயும் இருப்பீர்களாக"** (1. கொரி. 15 : 58).

அன்பானவர்களே, நாம் எப்படிப்பட்டவ்ர்களாக உள்ளோம்? நம்முடைய பக்தி விஷயத்தில் தேவனுக்கடுத்த காரியத்தில் எப்படியுள்ளோம்? மாறும் இயல்பு கொண்ட மெலித்தா தீவாரைப்போல் உள்ளோமா அல்லது எந்நிலையிலும் உறுதியுடனிருந்த முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் போல் உள்ளோமா? இக்காரியத்தில் நாம் மனிதர்களாக அல்ல, கிறிஸ்தவர்களாக இருப்போமாக..

## III. பவுல், ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்தான்

மீதிப் பயணம் தரும், மூன்றாவது பாடம் "தேவனுடைய ராஜ்யம்" பற்றியது. ஆம், சபையாகிய, தேவனுடைய இராஜ்யத்திற்கு, அந்த அப்போஸ்தலன் கொடுத்த அதிமுக்கியத்துவம் பற்றியது.

ரோமாபுரிக்குச் சென்றவுடன், யூதரில் பிரபலமானவர்களையெல்லாம் அழைத்து "... **காலமே தொடங்கிச் சாயங்கால மட்டும், தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான்**" என்றும், தான் வீட்டுச் சிறையில் இரண்டு வருடம் வைக்கப்பட்டிருந்தபோது, தன்னிடத்தில் வந்த யாவருக்கும், மிகுந்த தைரியத்துடனே, "**தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்தான் என்றும் உள்ளது**" (28 : 23, 31). அதாவது, ரோமாபுரியில், பவுல் செய்த ஊழியமே **இராஜ்ய ஊழியம்தான்.** இராஜ்யத்தைக் குறித்துப் பேசுவதுதான் பிரதானமானதென்றும், அவசியமென்றும், அது அவசரமென்றும் எண்ணிச் செயல்பட்டான்.

நாமாக இருந்தால் ரோமபுரி சென்றவுடன் என்ன செய்திருப்போம்? நம்முடைய பயண அனுபவங்கள், மற்றும் பயணத்தில் நேர்ந்த அவலங்கள் பற்றி பல நாட்கள் வரை சொல்லி, கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் வேலைகளுக்கு அங்கீகாரம் தேட முயற்சித்திருப்போம் அல்லது கிறிஸ்துவினிமித்தம் நான் செய்யும் தியாகங்களைப் பாருங்கள் என்று பீற்றி தம்பட்டம் அடித்திருப்போம் அல்லது இன்று அநேகர் செய்வதுபோல், கடல் யாத்திரையில், என்னுடைய உடமைகள் எல்லாம் போய்விட்டது என்று ஒப்பாரி வைத்து, இது தான் சரியான சமயம் என்று எண்ணி வசூல் வேட்டையில் இறங்கியிருப்போம்.

ஆனால், இந்தப் பிரதான அப்போஸ்தலனோ, இவையொன்றைப் பற்றியும் கவலைப்படாமல், தனக்குக் கிடைத்த நாட்களையும், நேரத்தையும், தனது முழுச் சிந்தையையும் ஒரே ஒரு காரியத்தில் மாத்திரம் ஈடுபடுத்தியுள்ளான். அந்த ஒரு காரியம் தேவனுடைய இராஜ்ஜியம் பற்றியது. அப்படியானால் இந்த தேவனுடைய ராஜ்யம் என்பது என்ன? ஏன் இதற்கு இவ்வளவு முக்கியத்துவம்?

தேவனுடைய இராஜ்யம் என்பதும் கிறிஸ்துவின் இராஜ்யம் என்பதும் ஒன்றுதான். (எபே. 5 : 5). கிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்த நாட்களில் தனது இராஜ்யத்தை, அதாவது, இராஜ்யமாகிய சபையைக் கட்டுவேன் என்று வாக்களித்தார். (மத். 16 : 16 - 18). அந்த இராஜ்ஜியம் எருசலேமில் ஸ்தாபிக்கப்படுமாகையால், அங்கு காத்திருங்கள் என்று தனது சீடர்களுக்குக் கட்டளையிட்டார். (அப். 1 : 5).

அதுபோலவே, தேவனுடைய இராஜ்யமாகிய சபை, பெலத்தோடே, எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. (அப். 2ம் அதி). இந்த இராஜ்ஜியத்துக்குள்ளாகத்தான் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சேர்த்துக் கொண்டு வந்தார். (அப். 2 : 47) வருகிறார். ஆக, இராஜ்யமும் சபையும், ஒன்று தான்.

**இந்த ராஜ்யமாகிய சபைக்காகத்தான் இயேசுக்கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார்.** ". . . . . தேவனும், பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்" என்று வசனம் சொல்கிறது. (1 கொரி. 15 : 24, எபே. 5 : 27).

அருமையானவர்களே, இந்த இராஜ்யமாகிய சபையின் முக்கியத்துவத்தை பவுல் அறிந்தபடியால்தான், அதற்காகவே தன்னை அர்ப்பணித்தார். ஆனால், இன்று நிலைமை என்ன? சபையைப் பற்றி பேசுவதே, கிறிஸ்தவ உலகில் பாவமாகக் கருதப்படுகிறது. சபையைப் பற்றி பேசுவது பாவமானால், அப்போஸ்தலன் பவுல் எருசலேமில் இரண்டு வருடம் தங்கி, தான் சந்தித்த எல்லோரிடத்திலும் **பாவம் செய்துள்ளான்.** . என்று தான் பொருள். அவன் பாவம் செய்யும்படியாகவே, தேவனால் பிரத்யேகமாகத் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளான். அப்படித்தானே? சொல்லுங்கள்.

தேவ மனிதனாகிய பவுலுக்கு இராஜ்யமாகிய சபையைப் பற்றிப் பேசுவதும், அந்த ஒரு சபைக்குள்ளாக ஜனங்களை வழி நடத்துவதும் முக்கியமானால், ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் அது முக்கியமானதாகவே இருக்க வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு பிரசங்கத்திலும், இராஜ்யம் அல்லது சபை பற்றிய செய்தி இருக்கவேண்டும். சபையைப் பற்றி பிரசங்கிப்பது தவறெனில், பவுல் செய்த பிரசங்கங்களனைத்தும் தவறுதான். ஆனால், தேவ ஆவியினால் நிரப்பப்பட்ட பவுல் பிரசங்கிக்கத் தெரியாதவரல்ல என்பது நம் யாவருக்கும் நன்றாகத் தெரிந்ததே.

ஆகவே, பிரசங்கிக்கும் ஒவ்வொரு வரும் இராஜ்யம் பற்றியே பிரசங்கிப்போம். கேட்கும் ஒவ்வொருவரும், இராஜ்யம், அல்லது சபை பற்றிய செய்திகளையே விரும்பிக் கேட்போம்!

அன்பானவர்களே, நாம் திட்டமிட்டபடி, ரோமப் பயணத்தை முடித்து அதிலிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்ள தேவன் உதவி செய்துள்ளார். இந்தப் பயண பாடங்களின்படி நடக்க சர்வ வல்ல தேவன் துணை புரிவாராக! ஆமென்!

**S. ராஜநாயகம்.**

# வேத பாட வகுப்புகள்

நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையைத் தொடங்குவது எப்படி என்ற தலைப்பின் கீழாக, தொடர்ந்து நாம் பாடங்களை பார்க்கப் போகிறோம். நீங்கள் இருக்குமிடத்தில் ஏற்கனவே கர்த்தருடைய சபை இல்லாதிருந்தால், அங்கு கிறிஸ்துவின் சபை தொடங்கப்பட வேண்டும் என்று ஆசிக்கிறோம். நீங்கள், கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராக இல்லாதிருந்தால், நீங்கள் முதல்படியாக செய்ய வேண்டியது, இரட்சிக்கப்படுவதற்காக கர்த்தருக்கு திருமுழுக்கின் மூலம் கீழ்ப்படிய வேண்டும், அப்பொழுது கர்த்தர் தம்முடைய சபையில் உங்களை சேர்த்துக் கொள்வார். (அப். 2 : 38, 47). நீங்கள் ஏற்கனவே அங்கத்தினராக இருப்பீர்கள் என்றால், நீங்கள் சபைக்கு செல்வதற்கு தயார் தான். ஆனால், அங்கு சபை இல்லாதிருந்தால், உங்களுக்காகவும், உங்களைச் சுற்றி வசிக்கும் மக்களுக்காகவும் கர்த்தருடைய சபை அங்கு தேவைப்படுகிறது. நீங்கள் சற்று முயற்சி எடுப்பீர்கள் என்றால், கர்த்தருடைய சபையை அங்கே ஆரம்பிக்கலாம்.

நாம், பிறருக்கு சுவிசேஷம் அறிவிப்பது எப்படி? கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு திருமுழுக்கு அளிப்பது எப்படி? ஆராதிப்பது எப்படி? போன்ற பாடங்களை பார்த்திருக்கிறோம். இப்பொழுது நாம் தொடர்ந்து வேத பாட வகுப்புகளை குறித்தும், அதை நடத்தும் விதம் குறித்தும் பார்க்க உள்ளோம்.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை வேதாகமத்தில் தந்திருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அப்புத்தகத்தை பற்றி அறியவும், தேவனுடைய சித்தம் என்னவென்று தெரியவும், நாம் அந்த வேதத்தை தனிப்பட்ட முறையிலோ அல்லது வேதத்தை அறிந்த யாராவது,ஒருவர் முறைப்படி கற்றுத், தருவதின் மூலமோ அறியலாம். கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம் கூறுகையில் நீங்கள் போய் சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்றார். (மாற்கு. 16 : 15) பவுல் கூறுகையில் "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2. தீமோ. 2 : 15). மீண்டுமாக அவர் கூறுகையில் "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர். 10 : 17). இயேசுவைக் குறித்து பரலோகத்திலிருந்து தேவன் கூறுகையில் " . . . . .

இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் . . . ." (மத்தேயு. 17 : 5). இந்த வசனங்களிலும், மற்றவைகளிலும் தேவனுடைய வார்த்தையை கேட்பதும், கற்றுக்கொள்வதும் எவ்வளவு முக்கியம் என்பதை அறியலாம். இந்த வேதாகம அறிவினால்தான் நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட முடியும்.

பிரசங்கிப்பதும், போதிப்பதும், தனிப்பட்டளவில் தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதும், நம்மளவில் சரிதான். ஆனால் பிறருடைய நிலைமை என்ன? உதாரணத்திற்கு, பலதரப்பட்ட வயதில் உள்ள ஆவிக்குரிய குழந்தைகளின் நிலைமை என்ன? உலக கல்வி முறைமையை பொருத்தவரையில், வயது வந்தவர்களிடம், பேருரைகளின் மூலமாய் போதிக்கப்படுகிறது. அங்கேயும் கூட, வகுப்புகளை அந்தந்த பாடங்களின் படி கீழ்ப்படுத்தி, கற்றுக்கொள்வதை முறைப்படுத்துகிறார்கள். ஆனால் ஆரம்ப கல்வி என்று வரும்போது, அதுவும் பலதரப்பட்ட வயதில் உள்ள குழந்தைகள் என வரும்போது அவர்களை வயதின் அடிப்படையில்தான் பல குழுக்களாக பிரிப்பார்கள். வெவ்வேறு வயதுடைய பல நூறு பிள்ளைகளை ஒருவகுப்பில் அடைத்து, அவர்களுக்கு ஒரு ஆசிரியரைக் கொண்டு ஒரே பாடத்தை சொல்லித்தரும் பள்ளிகளை நாம் ஒருக்காலும் காண முடியாது. அப்படியிருந்தால், அதை யாரால் சகித்துக் கொள்ள முடியும்?

உலக சம்பந்தமான கல்வி முறைமையில் நாம் இப்படி அறிவுசார்ந்த வகுப்புகளை பார்க்கும்போது, ஏன் நம் வேதவகுப்புகளில் இப்படிப்பட்ட சிந்தையை செலுத்தக் கூடாது. நான் பார்த்த பல இடங்களில், அதுவும் கொஞ்ச அங்கத்தினர்களைக் கொண்ட சபைகளில் வேத வகுப்புகள் வைப்பதின் அவசியத்தை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு மிக கடினமானதாக இருக்கிறது. அக்கிறிஸ்தவர்கள் வெகு நாட்களாக வீடுகளிலோ, குடியிருப்புகளிலோ ஆராதனைக்காக கூடி வந்து, சில பாடல்களைபாடுகிறார்கள் ஜெபிக்கிறார்கள். மேலும், வேத பகுதிகளும் அங்கு கூடி வந்தவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. அவர்களனைவரும் ஏதோ, ஒரு காரணத்திற்காக அதையே தொடர்ந்து செய்ய விரும்புகிறார்கள். இவ்வகையில் அவர்கள் தங்களைப் பற்றியே நினைப்பதால் மிகவும் தன்னலமிக்கோர்களாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பிரசங்கியார் என்ன கூறுகிறார் என்றே புரிந்து கொள்ள முடியாத, ஆவிக்குரிய குழந்தைகள் பற்றி ஒருபோதும் சிந்திப்பதேயில்லை, பெரியவர்களுக்கும், வாலிபர்களுக்கும், நடக்கும் வேத வகுப்பின் போதே குழந்தைகளுக்கும் வகுப்புகள் நடக்குமானால், அது குழந்தைகளுக்கும் மிகவும் உதவியாக இருக்கும். இப்படி செய்வதால்,

குழந்தைகளுக்கு புரியும் வண்ணம் பாடங்களை தயாரித்து கொடுக்கலாம். பெரியோர்களுக்கு சொல்லப்படும் வேதபாடங்களை இவர்கள் கேட்டு புரிவதைவிட மிக அதிகமாய் புரிந்து கொள்ளும் வாய்ப்பு குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

பிரசங்கவேளையும், போதிக்கின்ற நேரமும் ஏதோ பொழுதுபோக்கு அம்சமோ அல்லது யாரோ ஒருவர் தன்னுடைய பேச்சுத்திறமையை வெளிப்படுத்த ஒதுக்கிய நேரமோ அல்ல. அதற்கு மாறாக, அங்கே கூடி வந்திருப்பவர்கள் தேவ சித்தம் என்ன என்பதை புரிந்து கொள்ள உதவுவதே அதின் மேலான நோக்கம். இதை மனதில் கொள்வோமானால், இந்த வகுப்புகளின் மதிப்பை நாம் எளிதாக புரிந்துகொள்ளலாம். பிள்ளைகளுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் இது பொருந்தும். வேத வகுப்புகளை அதிகமாய் நடத்தும் சபைகளில், பிரசங்கங்களில் சொல்லப்படும் சத்தியத்தை பார்க்கிலும், வேத வகுப்புகளில் அமர்ந்திருக்கையில் அதிக சத்தியம் போதிக்கப்படுகிறது என்பது உண்மை. அல்லது பிரசங்க மேடையினால் கிடைக்கும் பலனைவிட வகுப்புகளில் கிடைக்கும் பலன் அதிகம் என்பது உண்மை.

ஆகையால், நீங்கள் இருக்குமிடத்தில் சபை ஆரம்பிக்கப்படுமானால், எத்தனை நபர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்து, வேத வகுப்புகளை நடத்துவதை மனதில் கொள்ளுங்கள். ஆனால், அங்கத்தினர்களின் எண்ணிக்கையை பொறுத்தமட்டில் சிறிய சபையாக இருந்தாலும் வேத வகுப்புகளுக்கென ஒரு மணி நேரத்தை ஒதுக்கி, அதில் ஆண்களுக்கென வகுப்புகளும், பெண்களுக்கென வேத ஆராய்ச்சியும், சிறுவர்களுக்கு தனி வகுப்பும் நடத்தலாம். சில நேரம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே வகுப்பு நடத்தலாம். சிறு பிள்ளைகள் அதிகமிருந்தால், அவர்களை இரண்டு பிரிவுகளாய் பிரித்து வகுப்பெடுக்கலாம். நாம் கூடி வருகின்ற இடம் எப்படிப்பட்டது என்பதைப் பொறுத்து ஏற்பாடு செய்யலாம். அது ஒரு பெரிய அறையாயிருந்தால், அந்த அறையின் நான்கு பகுதிகளிலும் வகுப்புகள் நடத்தலாம். வீடாக இருந்தால் ஒவ்வொரு அறையிலும் வகுப்புகள் நடத்தலாம்.

மற்றொரு காரியத்தையும் நாம் கவனமாய் அணுக வேண்டும். எந்த வகுப்புக்கு யாரை ஆசிரியராய் நியமிப்பது என்பதுதான் அது. யாருமே வகுப்பெடுக்க முன்வரவில்லை என்றால், வகுப்புகள் நடப்பது சாத்தியமல்ல. ஆனால் யாராவது ஒருவர் முயற்சி செய்தால், காலப்போக்கில் தன் திறமையை வளர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதற்குத் தேவை விடாமுயற்சிதான். அவர் தன் பாடங்களை

வாரநாட்களில் ஆயத்தம் செய்துவிட்டு, ஞாயிற்றுக்கிழமை வகுப்பெடுக்கலாம். அதுவே மற்ற வகுப்புகளுக்கும் பொருந்தும்.

வேத வகுப்புகளுக்கு பின்பு, ஆராதனைக்காகப்,பிரசங்கிக்கவுள்ள சொல்லப்படுகின்ற தேவ செய்தியை கேட்கும்படியாகவும் சபையாகக் கூடிவரலாம். வேத பாடத்தை அந்த பிராந்திய சபையின் ஒரு அங்கத்தினர் போதிக்கலாம். அல்லது வேதத்தை முறையாக கற்ற ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் பிராந்திய சபையின் ஊழியராக இருக்கும்படியாக அழைக்கப்படலாம். இவைகள் அனைத்தும் சாத்தியப்படவில்லை என்ற பட்சத்தில் சில வேதப்பகுதிகளை சபையிலுள்ள ஆண் அங்கத்தினர்கள் ஒருவர் பின்பு ஒருவராக வாசிக்கலாம். அல்லது சுவிசேஷ கைப்பிரதியை வாசிக்கலாம். கர்த்தருக்கு கீழ்ப்படிவோம் என்கின்ற வாஞ்சை இருக்கின்றவர்களுக்கு எல்லா காரியமும் சாத்தியமே.

நாம் மீண்டுமாக வகுப்புச் சூழலுக்கு திரும்புவோமானால், வேத ஆராய்ச்சி வகுப்புகளின் மூலமாக பல உற்சாகமான காரியங்களை நாம் வளர்த்துக் கொள்ளலாம். விசேஷமாக, சபையானது வளரும்போது அதிகமான வேத வகுப்புகள் தேவையாய் இருக்கிறது.

உதாரணமாக, பாடப்பகுதிகள் என்று வரும்பொழுது, பழைய ஏற்பாட்டையோ, புதிய ஏற்பாட்டையோ, வேதாகமத்திலுள்ள புத்தகங்களையோ, கிறிஸ்துவின் உவமைகளையோ, கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையோ, கிறிஸ்துவின் சுவிசேஷத்தையோ, புதிய ஏற்பாட்டு ஆராதனை பற்றியோ, வேதாகம சபையைப் பற்றியோ, கிறிஸ்தவ ஜீவியத்தைப்பற்றியோ, சுவிசேஷத்தை அறிவிப்பது பற்றியோ, படிக்கலாம். இப்படியாக பாடங்களை ஒழுங்குபடுத்துவதினால், முழு வேதாகமத்தைக் கொண்டோ அல்லது புதிய ஏற்பாட்டைக் கொண்டோ பாடங்களைப் படிக்கலாம். நான் இங்கு பிரதானமாக பெரியவர்களுக்கான வகுப்புகளை குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால், இப்படிப்பட்ட வேத வகுப்புகள் குழந்தைகளுக்காகவும், வாலிபர்களுக்காகவும், அவரவர்களுக்குரிய புரிந்து கொள்ளும் தன்மைக்கேற்ப ஒழுங்கு செய்யப்படலாம்.

சிறப்பு வேத பாட வகுப்புகளும் ஆயத்தம் பண்ணப்படலாம். புதிய அங்கத்தினர்கள் சபையில் இருப்பார்களானால், அவர்களுக்கென்று தனி வகுப்புகள் ஆயத்தம் செய்யலாம். அந்த வகுப்புகளில் சுவிசேஷத்தைப் பற்றி, சபையைப் பற்றி, கிறிஸ்தவ ஜீவியத்தைப் பற்றி, மற்றும் கிறிஸ்தவ வளர்ச்சிக்குத் தேவையான பாடங்களை கற்றுத் தரலாம்.

பிரசங்கிக்கவும், பாடல்களை வழி நடத்தவும், ஜெபங்களை ஏறெடுக்கவும் மற்றும் இப்படிப்பட்ட காரியங்களுக்கென பெரியோர்களுக்கும் வாலிபர்களுக்கும் தனியே பயிற்சி வகுப்புகள் நடத்தலாம். ஆராதனைகளால் நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் கர்த்தருக்காகச் செய்யப்படுவதாலும், குறிப்பிட்ட பங்கைச் செய்கிறவர் கர்த்தருக்காகவும், சபைக்காகவும் தன்னை பிரதிநிதித்துவப் படுத்துவதாலும், செய்ய வேண்டுவதை இப்பயிற்சியின் மூலம் சிறப்பாகச் செய்ய முயற்சிக்கிறோமேயொழிய, மற்றபடி, இக்காரியங்களில் பாண்டித்தியம் பெறுவது இதன் நோக்கமல்ல.

சிலவேளை, குழந்தைகளுக்கென பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டுமென சகோதரர்கள் விரும்புவார்கள். அந்த வகுப்புகளில் வேதாகமத்தில் எத்தனை புத்தகங்கள் உள்ளன என்று கேட்கலாம். அந்த புத்தகங்களை வரிசைக் கிரமமாக மனப்பாடம் செய்யச் சொல்லலாம். அப்போஸ்தலர்களின் பெயரை பட்டியலிட்டுக் காட்டலாம். இன்னும் வேதாகம உண்மைகளை அவர்களுக்கேற்ற பாணியில் எடுத்துரைக்கலாம். இது அவர்களுக்கு நல்லதொரு பயிற்சியாக அமையும். இப்படிப்பட்ட வகுப்புகளில் சிறு பிள்ளைகளுக்கென பாடல்களும், சில பல்லவிகளும் கற்றுத் தரலாம்.

இப்படிப்பட்ட வகுப்புகளில் வேதாகமமோ அல்லது புதிய ஏற்பாடோ, பாடப் புத்தகமாக இருப்பது அவசியம். சில வேளைகளில் இந்த வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் தங்கள் பாடக் குறிப்புகளை தயாரித்து அவைகளைப் பிரதிகள் எடுத்து வகுப்பில் உள்ளவர்களிடம் வழங்கலாம். வேறு இடங்களிலுள்ள கிறிஸ்துவின் சபையோடு நாம் தொடர்பு கொள்கையில் வேதாகம உண்மைகளை எடுத்துரைக்கும் புத்தகங்கள் இருக்கிறதென்று அறிந்து அதனை வேதாகம போதனைக்கு உதவும்படியாக வடிவமைக்கலாம். அப்படியானால், அந்த புத்தகத்தில் சில பிரதிகளை வகுப்புக்கென்று நாம் வரவழைக்கலாம். ஆனால் அந்த புத்தகத்தை மிக கவனமாக அந்த வகுப்பின் ஆசிரியர் படித்து, தேவனுடைய சத்தியம் தான் போதிக்கப்படுகிறதென்று உறுதி செய்ய வேண்டும்.

இந்த யோசனைகளும், கருத்துக்களும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கர்த்தருடைய சபையில் வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்தியிருக்கும் என்று நம்புகிறேன். நீங்கள் இருக்குமிடத்தில் சபையை ஆரம்பிப்பதற்கு, உங்களுக்கு உதவிகரமாக, இருக்கும்படி தொடர்ந்து அடுத்த பாடத்தில் மீதி காரியங்களைப் படிப்போம்.

**- J.C. CHOATE.**

# "ஆராதனை"

முதன் முதலாக தங்களுடைய வீட்டில் ஆராதனைக்காக ஆயத்தமான போது ரேச்சலும், ஆண்ட்ரூவும் வசனத்தை மிகவும் கவனமாக வாசித்தார்கள். "எப்படி கிறிஸ்தவனாக மாறுவதற்கு தவறான முறைகளால் போதிக்கப்பட்டோமோ அதே போல் ஆராதனை முறைமையை பற்றியும் தவறாக நாம் போதிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு" என்றும் உண்மையில் சில காரியங்கள் தவறாக இருக்க வேண்டும். ஏனென்றால் கத்தோலிக்க ஆராதனை முறைக்கும், பாப்திஸ்து ஆராதனை முறைக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன". என்றும் ஆண்ட்ரூ விளக்கினான்.

இதோ ஒரு வசனத்தைப் பாருங்களேன் என ஒத்த வாக்கியத்தைப் பார்த்தவாறு வாசிக்கள்ானாள் ரேச்சல். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்று. **இது ஒரு நல்ல எச்சரிப்பு**"என்று ஆண்ட்ரூவும் ஒத்துக் கொண்டான். ஆக நமக்கு பிடித்தமான அதிகாரத்திற்குத் திரும்பியிருக்கிறோம்" என ஆண்ட்ரூ சிரித்துக்கொண்டே கூறினான். ஞானஸ்நானம் எடுத்தபிறகு ஜனங்கள் சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதுதான் நம்முடைய நிலைமையும் கூட அப் 2:47 இவ்வாறு கூறுகிறது. அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், ஐக்கியத்திலும், அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். இந்த வசனம் ஆராதனையைப் பற்றி நிறைய காரியங்களை நமக்குப் போதிக்கிறது. அப்போஸ்தலர்களின் உபதேசம்தான் இப்போது நமக்கு படிப்புக்கு பிரயோஜனமாயிருக்கும். " அப்பம் பிட்குதல்" இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூறும்படியாக அனுஷ்டிக்கப்பட்டது. இது அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு சற்று முன்னதாக செய்யப்பட்ட செயல் மற்றும் ஜெபம் என தொடர்கையில்

"ஆனால் அவ்வளவுதானா?" ரேச்சல் வினவினாள். எந்த நாளன்று ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆராதனைக்கென்று கூடினார்கள்? "ஓய்வு நாள்" பற்றி நான் கேள்விப்பட்டது நினைவிருக்கிறது. அநேக இடங்களில் ஞாயிற்றுக்கிழமை ஆராதனை நடப்பது உண்மைதான். ஆனால் சனிக்கிழமையில் ஆராதனை செய்பவர்களும் உள்ளன்ர். ஆக உண்மையான ஆராதனைக்கு சரியான நாள் எது?

"சரி, நாம் அப்போஸ்தலர் நடபடிகளை வாசிப்பதின் மூலம் தெரிந்துகொள்ளலாம்" ஆண்ட்ரூ தன் கருத்தை தெரிவித்தான்.

சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு ரேச்சல் கேட்டாள், நாம் அவரை எவ்வாறு ஆராதிக்க வேண்டும் என்பதை அவர் ஏன் ஒரு பட்டியல் போட்டு காட்டியிருக்கக்கூடாது?"

"நல்லது" ஆண்ட்ரூ யோசித்துக் கொண்டே பதில் கூறினான். எனக்கு எல்லா காரணங்களும் தெரியாது. நாம் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறோமோ அதைப் பார்த்தால் உண்மையான ஆராதனை எது என்பதை புரிந்து கொள்ள முடியும். அதிகமான வசனப் பகுதிகளை படித்தும், தியானித்தும் கொண்டுள்ளோம். ஒரு காரியம் நிச்சயமானது, யாரெல்லாம் உண்மையாகவே சத்தியத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவர்கள் தேவனுடைய வார்த்தையை அதிகம் படித்து நிறைய விஷயங்களை தெரிந்து கொள்வார்கள். "அது சரியானது" ஒத்துக் கொண்டாள் ரேச்சல் எத்தனை முறை நாமும் கூட ஒரு காரியத்தைத் தேடப்போய் அநேக புதிய காரியங்களை கண்டுபிடித்திருக்கிறோம்".

உதாரணமாக, இங்கே அப்:11ம் அதிகாரத்தில் ஆண்ட்ரூ கூறுகிறான், வசனம் 19-ல் "ஸ்தேவான் நிமித்தம் எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல்" என்று பார்க்கிறோம். ஆனால் வசனம் 20-ல் அவன் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள்" என்று பார்க்கிறோம். அவர்கள் கொர்நேலியுவைப் போல யூதர் அல்லாதவர் களாயிருந்தார்கள். அப் 10-ம் அதிகாரத்தில் பேதுரு தேவனால் கொர்நேலியுவிடம் அனுப்பப்பட்டு, அதன் மூலம் தொடர்ந்து புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது.

வசனம் 26-ல் பர்னபாவும், பவுலும் அந்தியோகியாவில் உள்ள சபையில் ஒரு வருடமாக கூடிவந்திருந்தார்கள். இதிலிருந்து கிறிஸ்தவர்கள் தவறாமல் கூடிவந்தார்களென்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது" என்று தன் கருத்தைத் தெரிவித்தாள் ரேச்சல்.

வசனத்தின் இறுதிப் பகுதி கூறுகிறது " முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று". ஆக அங்கு சபை கூடியது, இவர்கள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டனர். ஆனால் எப்பொழுது கூடினார்கள்? " வாசித்துக் கொண்டே ஆண்ட்ரூ கேட்டான்.

இங்கு 13-ம் அதிகாரம் வசனம் -5ல் "பவுலும், பர்னபாவும் சாலமி பட்டணத்தில் வந்தபோது யூதருடைய ஜெப ஆலயங்களில் தேவ வசனத்தை பிரசங்கித்தார்கள். " வசனம் 14-ல்" அவர்கள் பெர்கே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து ஓய்வு நாளிலே ஜெப ஆலயத்தில் பிரவேசித்து உட்கார்ந்தார்கள்". அப்படியானால் தேவாலயத்தில் ஓய்வுநாளில் யூதர்களோடு சேர்ந்து கிறிஸ்தவர்களாக கூடி வந்தார்களா? ரேச்சல் கேட்டாள்.

"பவுலும், பர்னபாவும் சுவிசேஷ பயணத்தில் இருந்தபோது அங்கு எந்த ஊரிலும் சபை இல்லாமல் இருந்திருக்கலாம்" ஆண்ட்ரு பதிலுரைத்தான். வசனம் -15ல் பவுல் வசனத்தை வாசித்து அவர்களுக்கு பிரசங்கித்தான் என்று பார்க்கிறோம். ஆனால் வசனம் -45ல் யூதர்கள் பவுலின் செய்தியை எதிர்த்தார்கள். வசனம் -46ல் பவுல்,"இதோ! நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்றான். ஆனால் அவன் அந்தப் பட்டணத்தை விட்டுப் போகையில் தன்னாலும், பர்னபாவாலும் செய்யப்பட்ட பிரசங்கத்தினால் மனந்திரும்பிய சீஷர்களை அங்கு விட்டுச் சென்றார்கள் [வசனம் 52"] என்று பார்க்கிறோம்.

" ஆ, 20-ம் அதிகாரத்தைப் பாருங்கள்" என்று ரேச்சல் ஆச்சரியத்துடன் கூறினாள். "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில்...." (வசனம் 7.)

" இது மிகவும் உற்சாகமாயுள்ளது" ஆண்ட்ரு கூறினான். வசனம் -6ல் அவர்கள் எழு நாள் சபையில் தங்கியிருந்து, பின்பு கிறிஸ்தவர்களுடன் ஆராதனை செய்து நடுராத்திரிமட்டும் பிரசங்கித்து பின்பு தங்கள் பயணத்தை தொடர்ந்தார்கள். அவர்கள் ஏழு நாட்கள் தங்கியிருந்து, ஓய்வுநாளாகிய சனிக்கிழமையைக் கடந்து, வாரத்தின் முதல் நாளிலே ஆராதிக்கும்படி சபையாய் கூடிவந்தார்கள். அவர்கள் பயணப்பட்டு போக வேண்டிய அவசரத்திலும் நடுராத்திரிமட்டும் விழித்திருந்து விட்டு ஓய்வெதும் எடுக்காமல் பயணத்தை தொடர்ந்தனர்.

ஒத்த வாக்கியத்தில் I கொரி:16:2-ம் வசனம் வாரத்தின் முதல் நாளைப்பற்றிப் பேசுகிறது. "ரேச்சல் கூறினாள். "நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக்கடவன்"

"ஆக இந்த வசனமும் ஆராதனை நாள் எது என்றும், அதே நாளில் சபையின் வேலைக்காக காணிக்கை கொடுத்தார்கள் என்றும்

போதிக்கிறது" என்று ஆண்ட்ரு முடித்தான்.

"ஆதிச் சபையின் ஆராதனை பற்றி இப்பொழுது ஒரு நல்ல விளக்கம் நமக்கு கிடைத்திருக்கிறது" என்று ரேச்சல் கூறினாள்.

எல்லோரும் சேர்ந்து பாடி இருப்பார்கள். சிலர் இசைக் கருவிகளை உபயோகித்திருப்பார்கள். அதுவும் ஆராதனையில் ஒரு பகுதியாகக் கூட இருந்திருக்கலாம்.

பாட்டிற்கென்று ஒத்த வாக்கியத்தில் பல வசனங்கள் உள்ளன. அதில் ஒன்று (எபே 5:19-ல்") சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணி" என்று எழுதப்பட்டுள்ளது.

எந்த ஒரு சத்தத்தைப் பற்றியோ, இசைக்கருவிகளைப் பற்றியோ இந்த வசனத்தில் கூறப்படவில்லை. இருதயத்தில் பாடினார்கள் என்றுதான் உள்ளது" என்று ஆண்ட்ரு தெரிந்து கொண்டான். இந்தக் காரியங்களைப் பற்றி தொடர்ந்து படித்துக் கொண்டேயிருந்தோமானால், ஆராதனைப் பற்றிய முழு உண்மையையும் தெரிந்து கொள்ளலாம். கட்டாயம் நாம் தவறாகப் போகமாட்டோம், இது வரை நாம் படித்தவைகளின்படி செய்தால். பின்வரும் ஞாயிற்றுக்கிழமையில் தங்கள் இல்லத்தில் நடைபெறஇருக்கும் ஆராதனை வேளையைக் குறித்து தங்கள் நண்பர்களிடமும் உறவினர்களிடமும் அந்த வாரத்திலே ஆண்ட்ருவும் ரேச்சலும் பேசினார்கள். தன் வேலையினால் தனக்கு உற்ற நண்பனாகிய ஜான் என்பவரும், எலிசபெத்தும் அவள் கணவரும், ரேச்சலின் சகோதரியாகிய மேரியும் அவள் குடும்பமும் அவர்களோடு இருப்பது என்ன ஒரு ஆனந்தமான நேரம்.

ஆராதனையை முன்னின்று நடத்திய ஆண்ட்ரு, முதலில் அவர்கள் கூடிவருவதற்கான பின்னணியை பின்வருமாறு விளக்கினான். " நானும் ரேச்சலும் கிறிஸ்தவத்தைக் குறித்தும், இரட்சிப்பைக் குறித்தும், கிறிஸ்தவ ஜீவியத்தைக் குறித்தும், தேவனை ஆராதிப்பது குறித்தும் வேதாகமம் தெளிவாக என்ன போதிக்கிறது என்பதை தெரிந்து கொள்ள, வேதாகமத்தை தொடர்ந்து வாசித்துவந்தோம். நாங்கள் படித்த அந்த அதிசயமான சத்தியத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம். தேவனுடைய வார்த்தையே நம் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கிறது, அதனால் வேதாகமத்தை வாசித்து அதற்கு கீழ்ப்படிவது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

தேவனை ஆராதிக்கும்படி கூடிவருவது கீழ்ப்படிதலின் ஒரு பகுதியாகும். தேவன் நம்மீது கொண்டிருந்த பெரிதான அன்பையும், நம்முடைய பாவங்களுக்காக இயேசுகிறிஸ்துவை சிலுவையில் மரிக்கச் செய்தார் என்பதையும் வேதாகமம் நமக்கு தெரிவிக்கிறது. யோ 14:6ல் இயேசு நமக்கு தெளிவாக போதிப்பது என்னவெனில், " நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" நானும் ரேச்சலும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்த பொழுது பல கேள்விகள் எழுந்தன," ஆனால் எது சரியான வழி? அநேக சபைகள் இருக்கிறது, அவைகள் அநேக காரியங்களையும், இரட்சிக்கப்படுவதற்கு அநேக வழிகளையும் போதிக்கின்றன என்பதை நாம் கண்டு கொண்டோம். எந்த சபை சரியானது? எந்த உபதேசம் சரியானது?

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்படியாக, இயேசுவும், அப்போஸ்தலர்களும் என்ன போதித்தார்கள் என்பதை வாசித்து தெரிந்துகொள்ளும்படி, முதலாவதாக வேதாகமத்தை நாடினோம். கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து, பரமேறிய பிறகு, அப் 2ம் அதிகாரத்தின்படி, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது வல்லமையோடு வந்த பொழுது, சபையின் அங்கத்தினர்களான விசுவாசிகளால் உருவாக்கப்பட்ட இயேசுவின் குடும்பமாகிய சபை தொடங்கப்பட்டது. மக்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்படி, அந்த நாளிலே முதன்முறையாக இரட்சிப்பின் சுவிசேஷம் உபதேசிக்கப்பட்டது. வசனம் 38ல் அவர்களுக்கு சொல்லப்பட்டது என்னவெனில், நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" 41ம் வசனத்தில் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள் எனக் கூறப்பட்டிருக்கிறது. 47ம் வசனம், "......,இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்" எனக் கூறுகிறது.

நாங்கள் கத்தோலிக்க சபையின் பாதிரியாரிடமும், பாப்திஸ்து சபையின் பிரசங்கியாரிடமும் சென்று, சபையைக் குறித்தும், இரட்சிப்பைக் குறித்தும் கேட்டபொழுது, வேதாகமத்தில் நாங்கள் வாசித்த காரியங்களையல்லாமல் வித்தியாசமான காரியங்களை போதித்தார்கள். நாம் தேவனை பிரியப்படுத்த வேண்டுமென்றால், ஆதிக் கிறிஸ்தவர்கள் என்ன செய்தார்களோ, அதையே செய்ய வேண்டும் என்றும், வேதாகமத்தில் நாம் வாசித்த அந்த சபையில் தேவன் நம்மை சேர்ப்பார் என்றும் உறுதியாய் நம்பினோம்.

பிதாவாகிய தேவனை ஆராதிக்கும்படி, மிக இளைய சரீரமாக அல்லது கிறிஸ்துவின் சபையாக, முதல் முதலாக எங்கள் இல்லத்தில் கூடிவந்திருக்கிறோம். யூதர்கள் போல், தேவனை துதிக்கும்படி ஜெபிக்கவும், பாடவும் ஓய்வுநாளாகிய ஏழாம் நாளில் கூடிவராமல் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்திருக்கிறார்கள் என வேதாகமத்தில் வாசித்தோம். அவர்களும் வேதத்தைப் படித்திருந்தார்கள். மத் 26:26,27,28 "....இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து. நீங்கள் வாங்கி புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புதுஉடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" ,இவ்வாறு இயேசு தன்னை நினைவுகூறும்படி ஏற்படுத்தியிருந்த பந்தியில் பங்குபெறும்படி அல்லது அப்பம் பிட்கும்படி வாரத்தின் முதல்நாளிலே சபை கூடிவந்தது என அப் 20:7ல் நாம் வாசிக்கிறோம்.

நாம் இரட்சிக்கப்பட வேண்டியவர்களென்பதையும், நாம் இரட்சிப்பின் விதிமுறைகளைத் தீர்மானிக்க வேண்டியவர்களல்ல என்பதையும் நினைவில் கொண்டவர்களாய் இருக்க வேண்டுமென்பது மிகவும் முக்கியமானதாகும். நாம் தேவனுடைய மகத்துவங்களை வாசிக்கும்பொழுது, நாம் மிகவும் சிறியவர்கள் என்பதும், அவருடைய வழிநடத்துதலை நாம் சார்ந்திருக்கிறோம் என்பதும் நினைவுறுத்தப் படுகிறது. யோ.12:49ல் இயேசு இவ்வாறு கூறினார், "....நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்", பிதா கட்டளையிட்டபடி பேசயிருப்பதால், முந்திய வசனத்தில்(48)" என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என எச்சரிக்கிறார்.

இயேசுவின் இந்த எச்சரிப்பின் வார்த்தையினால் தான் நாம் இங்கு கூடிவந்திருக்கின்றோம். காரணம் என்னவெனில்! நியாயத் தீர்ப்பின் நாளில் நித்திய ஜீவனை அவருடைய வசனம் நமக்கு உறுதிப்படுத்த நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை புரிந்துகொள்வதற்காக புதிய ஏற்பாட்டை ஆராயும்படி கூடி வந்திருக்கின்றோம்".

***R.R. NAYAGAM*** ***B.B. CHOATE***

தெரிந்து கொள்ளுங்கள்

# "ஆராதனை"

## பாடம் - 4

**முன்னுரை :**

1. ஆராதனை என்றால், "பயபக்தியுடன் வணங்குதல்" "தாழப் பணிதல்" என்று பொருள்.
2. நம்முடைய ஆராதனை சரியானதாக இருப்பதற்கு, ஆராதனைக்கான நமது மனோ நிலை எப்பொழும் சரியானதாக இருக்க வேண்டும். இருப்பினும், ஆராதனையென்பது மனநிலையல்ல, அது செயல்கள் தான் (I கொரி 14:15)
3. ஆராதனை என்பது முழுமையும் செயல்களைக் கொண்டதல்ல. ஆனால், நிச்சயமான சில வெளிப்புற செயல்கள் மூலமாக, மனநிலையை வெளிப்படுத்துவதாகும்.
   - a) பாடு - எபே. 5 : 19
   - b) ஜெபி - அப் 2 : 42
   - c) போதி - எபே. 4 : 11 16
   - d) அப்பம்பிடு - அப். 20 : 7
   - e) கொடு - 1 கொரி. 16 : 1 2.
4. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆராதனையில் தவறாமல் பங்கு பெற வேண்டும். ஒருவேளை உடல்நிலை அதற்கு தடையாக இருந்தால் மாத்திரம் தவறலாம். எபி. 10 : 25.

**விவாதம்**

### I. மூன்று வகையான தவறான ஆராதனை :

### A. வீணான ஆராதனை மத். 15 : 8, 9

1. இது வெறுமையாகச் செய்யப்படும் ஆராதனை
2. இதற்கு நோக்கமும், ஆவிக்குரிய ரீதியில் அர்த்தமும் இல்லை.
3. ஆகவே, இது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதல்ல.

### B. சுய இஷ்டமான ஆராதனை, கொலோ. 2 : 20 - 23

1. இந்த ஆராதனை மனிதனுடைய விருப்பத்தின்படியாக ஏற்றெடுக்கப்படுகிறது.
2. இது மனித வழிகாட்டுதலின்படியானது.
3. உண்மையில், இது மனிதனின் வழிகாட்டுதலின்படி மனிதனால் ஆராதிக்கப்படுவது. மனிதன் மனிதனை வழிநடத்துவது.

**C. அறியாத ஆராதனை. அப். 17 : 23**

1. அறியாத ஆராதனையென்பது புரிந்து கொள்ளாமல் ஆராதிப்பது.
2. இந்த ஆராதனை நேர்மையானதாகவும்,நல்ல நோக்கமுடையதாக இருந்தாலும் கூட, ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதல்ல.

## II உண்மையான ஆராதனையின் நான்கு நிலைகள் :

**A.** உண்மையான ஆராதனையின் இலக்கு தேவன். மத் : 4 : 10, வெளி. 22 : 8 9.

**B.** தேவனை, அவருடைய உண்மைக் குணங்களினடிப்படையில் அறிந்து, அங்கீகரியாமல், அவருக்கு மரியாதை செலுத்தாத படியால்தான், உலகம் விக்கிரக வணக்கத்தில் மூழ்கி, ஆவிக்குரிய ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், சீர்கேடு அடைந்தது. (ரோமர் 1 : 18 - 32). இது குறித்து, நாம் ஜாக்கிரதையாக இராவிட்டால், மீண்டும் அதுபோலவே இன்றும் ஏற்படும்.

**C.** தேவனுடைய தன்மை. அப். 17 : 22 31.

**D.** உண்மையான ஆராதனையின் பண்புகள் – ஆவியோடும்

1. ஆராதிப்பவருக்கும், தேவனுக்கும் இடையில் சரியானபடியான ஆவிக்குரிய உறவு இருந்தால்தான், அது ஆவிக்குரிய ஆராதனையாக இருக்க முடியும். 1. பேதுரு. 2 : 5, 9, 10, எபி. 13 : 15 16 எல்லா கிறிஸ்தவர்களும் ஆசாரியர்கள்.
2. கிறிஸ்துவுக்குள் எந்த ஒரு வேற்றுமையுமில்லை (கலா 3:26 –29)

**E.** உண்மையான ஆராதனையின் அடையாளம் –உண்மையோடும்

1. தேவனுடைய வார்த்தையே சத்தியம். யோவா. 17 : 17.ஆகையால் உண்மையோடு ஆராதிக்கப்படும் எல்லா ஆராதனையும் தேவனுடைய அளவின்படியாக அளக்கப்பட வேண்டும். (கொலோ. 3 : 17).
2. முதலாம் உடன்படிக்கையின் நாட்களில், ஆராதனைக்கான அனைத்து காரியங்களும், மிருகங்களுடைய இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டது. (எபி. 9 : 1 – 23). இரண்டாம் உடன்படிக்கையின் கீழாக, எல்லாமே கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டுள்ளது.

**F.** உண்மையான ஆராதனை எங்கிருந்து வந்தது? கிறிஸ்துவின் உபதேசங்கள்

1. கிறிஸ்துவுக்கு எல்லா அதிகாரமுண்டு. மத். 28 : 18 20, உண்மையான ஆராதனையின் ஐந்து பங்குகள் மூலம், தேவனுக்குத் துதியும், கனமும் செலுத்தப்படமுடியும்.

a) கர்த்தரின் பந்தி
b) ஜெபம்
c) கொடுத்தல்
d) பாடுதல்
e) தேவனுடைய வார்த்தையை போதித்தல்.

## III. ஆராதனைக்கான இடம் :

**A.** இடம் தேவனால் குறிக்கப்பட்டுள்ளது. "நீங்கள் இந்த மலையிலும், எருசலேமிலும், மாத்திரமல்ல எங்கும் பிதாவை தொழுது கொள்ளுங் காலம் வருகிறது".

**B.** முதல் நூற்றாண்டு சபை, வித்தியாசமான இடங்களில் கூடிவந்தது. (வீடுகள், ஆலயம், மற்றும் வேறு இடங்கள்) எங்கே கூடுகிறோம் என்பது முக்கியமானதல்ல. ஒரு வேளை பிராந்திய சபைக்கு, கூடிவருவதற்கான இடமிருந்து, மூப்பர்கள் அது கூடி வருவதற்கான இடம் என்று அறிவித்திருந்தால், நாம் அவசியம் அங்கு இருக்க வேண்டும். (எபி. 10 : 25).

**C.** தேவனைத் துதித்து ஆராதிப்பதற்கான பங்குகளில் எதைச் செய்தாலும், எப்பொழுது செய்தாலும், அது சரியானபடி ஆவியோடும், உண்மையோடும் செய்யப்பட வேண்டும். தனியொருவராகச் செய்தாலும், கூட்டாகச் செய்தாலும் இது தான் உண்மை.

## IV. ஆராதிப்பவருக்கு அவசியமானவை :

**A.** ஏற்றுக்கொள்ளப்படத்தக்க ஆராதனையை ஏறெடுக்க வேண்டுமென்றால் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்க வேண்டும். (எபி. 9 : 22).

**B.** பக்தியோடும், தேவ பயத்தோடும் தேவனிடம் ஆராதிப்பவர் வந்து சேர வேண்டும். (எபி. 12 : 28, 29).

**C.** மகிழ்ச்சி, சந்தோஷம், நன்றியறிதலான இருதயத்தை ஆராதிப்பவர் பெற்றிருக்க வேண்டும். (எபி.13:15 - 16;சங் 118:23)

## முடிவுரை :

1. ஆராதனை எப்படியிருக்க வேண்டுமென்று தேவனுடைய வார்த்தையில் திட்டமிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
2. புதிய ஏற்பாட்டு ஆராதனை தேவனை மகிமைப்படுத்துகிறது, ஏனெனில் உண்மையாக ஆராதிப்பவன் தேவ சித்தத்திற்கு ஏற்றபடி தனது விருப்பங்களை வளைக்கிறான்.
3. உண்மையாக ஆர்ராதிப்பவன், தேவனுடைய சத்தியத்திற்கு, தனது ஆவியில் கீழ்படிவதால், அது அவனுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது.

**Toney L. Smith** **EZSR**

# வெளிப்படுத்தின விசேஷம்

## பின்னணி II.

கடந்த மாதத்தில் நாம் வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினோம். இப்புத்தகத்தைப் படித்து அதிலுள்ளவைகளை தெரிந்து கொள்வதற்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படியாய், அதன் பின்னணியை இம்மாதமும் தொடர்ந்து படிப்போம். இப்புத்தகத்திற்குள்ளாக சென்று, இதிலுள்ளவைகளைப் படிப்பதற்கு முன்பாக, நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய காரியம் ஒன்றுண்டு. அது, இப்புத்தகத்தை நாம் எப்படி அணுகப் போகிறோம் என்பது. ஏனெனில், இப்புத்தகத்தைப் படித்து அதனடிப்படையில் பெறப்பட்ட பல தவறான கொள்கைகளுக்கும், எடுக்கப்பட்ட தப்பான முடிவுகளுக்கும் காரணம், இப்புத்தகம் தவறான முறையில் அணுகப்பட்டது தான் நாம், இப்புத்தகம் பற்றியுள்ள சில பொதுவான, அதே சமயம் தவறான அணுகுமுறைகளை சுருக்கமாகப்படித்து, அதன் பிறகு, இதைப் படித்து தெரிந்து கொள்வதற்கு எது சரியான அணுகுமுறை என்ற முடிவுக்கு வருவோம்.

இப்புத்தகத்திற்கு, அடிப்படையில் குறைந்தது நான்கு தவறான அணுகுமுறைகள் உண்டு. 1. முதலாவது அணுகுமுறை தேவனுடைய வெளிப்பாடு ஏற்கனவே முடிந்து விட்டது (Preterist) என்பதாகும். இவர்கள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தவிர்த்து மற்ற எல்லாமே யோவானுடைய வாழ்நாட் காலத்தில் நிறைவேறிவிட்டதென்று நினைக்கிறார்கள். இவர்களுடைய அணுகுமுறையின் முக்கிய முரண்பாடு யாதெனில், இப்புத்தகம் யாருக்காக எழுதப்பட்டதோ அவர்களைத் தவிர, வேறு யாருக்கும் இப்புத்தகம் சம்பந்தமில்லாதது என்பது (வெளி. 1 : 3). இந்த விபரீத கொள்கை, சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக Maxking என்ற மனிதனால் கிறிஸ்துவின் சபைக்குள் அறிமுகப் படுத்தப்பட்டது. இம்மனிதனும், இவனைப் பின்பற்றுபவர்களும் கி.பி. 70க்கும் முன்பாகவே, வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டதென்றும், (கி.பி. 96) என்ற உண்மைக்கு மாறாக) வெளிப்படுத்தின விசேஷமும், மற்ற வேதவாக்கியங்களும், அதாவது கிறிஸ்து திரும்பி வருதல், உலகத்தின் முடிவு, உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு எல்லாமே நிறைவேறிவிட்டதென்று போதிக்கின்றனர். இக்கொள்கை பொதுவாக **“கி.பி. 70 கொள்கை”** என்று அறியப்பட்டிருக்கிறது. இந்த இயக்கம் இந்தியாவிற்குள்ளும் வந்திருக்கிறது. பின்வரும் கட்டுரைகளில் மேலும் இது குறித்து அதிகமாக பார்க்க உள்ளோம்.

இரண்டாவது அணுகுமுறை, இலக்கியத் துறையில் தற்குறிப்புக் குறிகளை மேற்கொள்ளும் முறை (Futurist) என்பதாகும். இது, நாம் இப்பொழுது படித்த முதலாவது அணுகுமுறைக்கு நேர் மாறானது.

இக்கொள்கையானது, வெளிப்படுத்தல் நான்காம் அதிகாரத்திற்குப் பிறகுள்ள எதுவும், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக நிறைவேறாது என்கிறது. ஆயிரம் வருட அரசாட்சி என்ற தவறான கொள்கை எல்லாம் இதில் அடக்கம். வரப்போகும் நாட்களில் இந்த தவறான கொள்கைகளைப் பற்றி விரிவான முறையில் படிக்கும் திட்டமுமுண்டு. இந்த அணுகுமுறை **"சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள்"** என்று வெளி. 1 : 1 மற்றும் 22 : 6 ல் சொல்லப்பட்டிருக்கும் வசனங்களோடு முரண்படுகிறது. இது மாத்திரமல்ல, இந்த அணுகுமுறை, இது யாருக்காக எழுதப்பட்டதோ அவர்களுக்கும் இப்புத்தகத்திற்கு சம்பந்தமில்லை என்ற நிலையை கிட்டத்தட்ட ஏற்படுத்துகிறது.

மூன்றாவது அணுகுமுறை, ("Continuous Historical") தொடர் வரலாற்று அணுகுமுறை என்பது. இக்கொள்கையாளர்கள், சபையின் ஆரம்ப கால முதல், இந்நாள் வரைக்கும் உள்ள **"காலக்கிரமமான சரித்திரம்"** முன் கூட்டியே,இந்நூலில் எழுதப்பட்டுள்ளதாகக் காண்கிறார்கள். இந்த அணுகுமுறை, வழி விலகிப்போன கத்தோலிக்க சபை மற்றும் ப்ராடஸ்டாண்ட் சபை போன்றவைகளுக்கு மிக அதிக முக்கியத்துவம் தருகிறது. இக்கொள்கையைப் பின்பற்றுகிறவர்களால் இந்நூலை அடிப்படையாகக் கொண்டு, சரித்திர சம்பவங்கள், தேசங்கள், ஜனங்கள், "போப்"கள், அடையாளங்காணப்படுவதோடு, இன்னும் குறிப்பாக, இவர் இவர்கள் தான் இந்த கத்தோலிக்க "போப்"கள் என்றும், இவர்கள் தான் சரித்திர புருஷர்களாகிய நெப்போலியன், முசோலினி, ஹிட்லர் என்றும் இவைகள் தான் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் என்றும் கூறுகின்றனர். தொடர் சரித்திர அணுகுமுறையின்படி சொல்லப்படுபவைகள் எந்த ஆதாரமுமில்லாமல் மனதில் எழுபவைகளைச் சொல்லுபவைகளாகவே உள்ளது. இக் கொள்கையாளர்கள் இரண்டு பேர், பெரும்பாலும் பெரிய அடையாளங்கள் மற்றும் சம்பவங்களுக்கு தங்களுக்குள் ஒருபோதும் ஒத்துப்போகமாட்டார்கள். பெரும்பாலும் தங்கள் வாழ்நாட் காலத்தில் உலகத்தின் முடிவு இருக்கும் என்று அவர்கள் பொதுவாக கணக்கிடுவர். இந்த் அணுகுமுறை, இந்நூல் உண்மையில் யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களுடனான தொடர்பை முற்றிலும் நீக்கிப்போடுவதோடல்லாமல், ஆசியா மற்றும் உலகின் பிற இடங்கள், மற்றும் பகுதிகள் ஆகியவைகளை ஒதுக்கிவிட்டு, மேற்கு ஐரோப்பாவில் உள்ள சரித்திர நிகழ்வுகளை மாத்திரம் அடியொட்டி வருவதாக இருக்கும். இந்த அணுகுமுறை, எந்த ஆதாரமுமில்லாமல் மனவிருப்பத்தின்படியானது தான் என்பதற்கு இது மேலும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

நான்காவது, தத்துவார்த்த சரித்திர அணுகுமுறை Philosophy of History என்பதாகும். இந்த அணுகுமுறை, வெளிப்படுத்தலில் உள்ள

அடையாளங்கள் குறிப்பிட்ட சம்பவங்களைக் குறிக்காமல், பொதுவான கொள்கை மற்றும் சம்பவங்களின்படி ஒவ்வொரு சந்ததிக்கும் அர்த்தம் தருகிறதாக உள்ளதென்று நம்புகிறது. இந்த அணுகுமுறைக்கு "காலவரையற்ற உருவக அணுகுமுறை" (Timeless Symbolic) "உயர்ந்த இலட்சியக் கொள்கை அணுகுமுறை (Idealist,) ஆவிகளிடம் தொடர்பு கொள்ளக் கூடும் என்ற கொள்கை அணுகுமுறை"(Spiritualist) என்று பெயர். வெளிப்படுத்தின விசேஷம் ஒவ்வொரு தலைமுறைக்கும் கொள்கைகளைப் போதிக்கிறதாக இருந்தாலும், தத்துவார்த்த சரித்திர அணுகுமுறையானது, அநேக குறிப்பான தீர்க்கதரிசனங்களை ஒதுக்கிவிடுகிறது. ஆனால், வெளிப்படுத்தலில் உள்ள குறிப்பிட்ட தீர்க்கதரிசனங்கள் மற்றும் குறிப்புகள், நாம் இந்நூலை படிக்கும்போது, தெளிவான முறையில் வெளியாகும்.

நாம் இப்பொழுது, வெளிப்படுத்தலுக்கான பல தவறான அணுகுமுறைகளைக் கண்டோம். அவைகள் யாவும், அநேகரை கொள்கை ரீதியாக ஏதாவதொரு வகையில் தவறிழைக்கும்படி செய்துள்ளது அல்லது, குறைந்த பட்சம் அக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறவர்களை, இந்நூலில் உள்ள முக்கியமான உபதேசங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளவும், கண்டு கொள்ளாமல் இருக்கவும் செய்துள்ளன. ஆகையால், இங்கே கேள்வியென்னவெனில், **"இப்புத்தகத்திற்கான சரியான அணுகுமுறை எது?"** என்பது. நாம் இந்நூலைப் படிக்கும் போது புரிந்து, மனதிலே நிறுத்திக் கொள்ளும் படியான சில முக்கியமான கருத்துக்களை இங்கே கவனியுங்கள்.

1. வெளிப்படுத்தல் *1 - 3* அதிகாரங்களில் உள்ள பெரும்பகுதி, சொல் அர்த்தம் உடையவைகளாக உள்ளது. சொல் அர்த்தம் உடைய பகுதிகளை நாம் உருவக முறையில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

2) வெளி. 4 - 22 அதிகாரங்களில் உள்ளவை உருவக முறையில் உள்ளது. இவைகளில் அடையாளங்களும், எண்களும் அதிகம் காணப்படும். உருவகப் பகுதிகளை சொல் அர்த்தம் உடையவைகளாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது. இத்துடன், இன்னொரு காரியத்தையும், நாம் மனதில் கொள்ள வேண்டும். ஒருவேளை, வெளிப்படுத்தலில் உள்ள அடையாளங்கள் கொஞ்சம் வேறுபட்டதாக இருந்தாலும், அவைகளுக்கான ஆதாரங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளது. இந்நூலை நாம் தொடர்ந்து படிக்கும் போது, இதற்கான உதாரணங்களை நாம் தெளிவாகக் காணமுடியும்.

எண்கள் அடையாளமாகப் பயன்படுத்தும் முறை, இந்நூலில் பொதுவான அம்சமாக இருக்கும். (வெளி. *7 : 1, 13 : 18, 20 : 2 6)*,**எண் இரண்டு** பலத்தை குறிப்பதாக இருக்கலாம். (வெளி. *11 : 1, 13 : 11)* **எண் நான்கு** இது அடிக்கடி, பூமியோடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. (வெளி *7:1;20:8)* **எண் ஏழு** முழுமையான ஒன்றாக குறிப்பிடப்படுகிறது (வெளி. *1 : 4, 12, 16, 20; 5 : 1, 6; 8 : 2; 10 : 3, 11 : 13; 15 : 1, 7, 17*

: **4) எண் பன்னிரண்டு** (12ன் மடங்காக உள்ள 1,44,000 உட்பட) ஏதாவது ஒன்று அல்லது இரண்டு ஏற்பாடுகளின் கீழான தேவனுடைய ஜனங்களைத் தொடர்புபடுத்துவதாக இருக்கலாம். (வெளி. 7 : 4; 14 : 1, 21 : 12, 14) **எண். 1, 000** பெரிய, அளவற்ற எண்ணிக்கைக்கு அடையாளமாகும். (வெளி. 7 : 4; 14 :1; 20 : 2 6 மற்றும் சங். 90 : 4 2 பேது. 3:8 யையும் காண்க) **எண் 1260 அல்லது 3 1/2** என்பது ஸ்திரமற்ற, நொறுங்கிப்போன ஒரு கால கட்டத்தைக் குறிப்பதாக இருக்கலாம்.

3. வேதாகமத்திலுள்ள பிற வசனங்களோடு முரண்படுகிற எந்தவொரு கொள்கையும், புரிந்து கொள்ளுதலும் தவறானதாகும். **உருவக முறையில் எழுதப்பட்டுள்ள பகுதிகள், சொல் அர்த்த முறையில் பிற இடங்களில் எழுதப்பட்டுள்ள பகுதிகளை விட தெளிவான போதனைகளைக் கொடுக்க முடியாது.**

4. வெளிப்படுத்தல், முழுவதும் காலக்கிரம அடிப்படையில், வராமல் குறைந்தபட்சம் சில பகுதிகள் திரும்ப திரும்ப வருபவைகளாக உள்ளது. உலகத்தின் முடிவு பற்றி இந்நூலில் ஏழுமுறை சொல்லப்பட்டுள்ளது. (வெளி. 6:12 -17; 7 : 9- 17. 11 : 18, 14 : 14 -16 ; 17 - 21; 19 : 21- 20 : 7- 15)

5. இந்நூலைப் படிக்கும்போது உன் சுயபுத்தியின் மீது சாயாதே. (நீதி. 3 : 5; 2 பே. 1 : 20) இதைப் படிக்கும் போது உன் கற்பனை வளத்துக்கும் இடம் கொடாதே.

மேற்சொன்ன கொள்கைகளை நாம் மனதிலே வைத்து இந்நூலைப் படிப்போமானால், அநேகர் இந்நூலுக்கு தப்பான அணுகுமுறையை மேற்கொண்டு, அதன் மூலம் பெற்றுக் கொள்கிற தவறான பொருள்களை, விளக்கங்களை நம்மால் தவிர்க்க முடியும். நமது அடுத்த கட்டுரையில், இந்நூலை தவறாகப் புரிந்து கொண்டதின் விளைவாக வந்த சில கள்ள உபதேசங்களை விளக்கமாக படிக்க விரும்புகிறோம்.

**JON MACON** **ESZR**

**இரட்சிப்பின் படிகள்**

1. நற்செய்தியை கேட்க வேண்டும்
   - *ரோம. 10:17, யோவான் 20:20*
2. விசுவாசிக்க வேண்டும்
   - *எபிரேயர் 11:6, ரோமர் 3:28*
3. பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்
   - *அப் 2:38,17:30*
4. கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும்.
   - *மத் 10:32, ரோமர் 10:10*
5. பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும்.
   - *அப் 2:38, 22:16*

# கீழ்ப்படியாமையால் கல்லெறி பட்டுச் சாய்ந்தவன்

சிருஷ்டிகரை நினைக்க வேண்டிய இந்த வாலிபப் பிராயத்தை, இனிதே கழித்துக் கொண்டிருக்கும் வாசகர்களுக்கு, வாலிப வயதிலும் தன் பிதாவின் உள்ளமறிந்து, அவரின் சித்தத்தை, பிறர் சீற்றம் கொண்டபோதிலும் சலிக்காமல், தன் குருதியையும் ஒரு பொருட்டாக கருதாமல் சிலுவையில் சிந்திய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். கண்களுக்கு நல்லதாய் தோன்றுவதெல்லாம் தன்னுடையதாக இருக்கவேண்டும் என்ற சிந்தனை இப்பருவத்தில் நம்மை சிலந்திவலைப்போல் சுற்றிக் கொண்டு பல பிரச்சனைக்குள் சிக்க வைக்கும். அவைகளில் சிக்கிச்சிலர் மீண்டதுண்டு. ஆனால், பலரோ இருந்த இடம் தெரியாமல் கருகிப்போனதுதான் வரலாறு

தேவ கிருபையால், ஆடு மேய்ப்பதிலிருந்து ஆட்சிப்பீடம் ஏறிய தாவீது தன் சங்கீதத்தில் தேவனிடம் மன்றாடுகையில், " என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்" (சங். 119:36) என விவேகமாய் விண்ணப்பத்தை முன் வைக்கின்றான். தாவீது, பொருளாசை நமக்கு தீமையை விளைவிக்கும் என அறிந்தே இப்படி கேட்டிருக்கின்றான். யூதன் அன்றோ, சரித்திரத்தைக் கரைத்துக் குடித்திருக்கமாட்டானா என்ன? அது மாத்திரமல்ல, தான் சார்ந்திருக்க வேண்டியது தேவனுடைய சாட்சியே என்பதையும் அறிந்திருக்கின்றான்...."கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது" என அவனே சங்19:7ல் ஆவியானவரின் உதவிகொண்டு விளம்பியிருக்கிறானே. நாமும் இவ்வழி நடக்க வேண்டும் என்பதற்காய், தேவனுடைய கட்டளையை அற்பமாய் எண்ணி, கீழ்ப்படியாததால் அழிந்த ஆகான் இம்முறை உங்கள் முன் நிறுத்தப்படுகிறான்.

**தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாதவன்:**

எகிப்திய அரசனாம் பார்வோனின் கோரப்பிடியிலிருந்து விடுபட்டு, மோசேயால் வழி நடத்தப்பட்டு, கானானின் எல்லைமட்டும் வந்த இஸ்ரவேலர்கள், மோசேயின்

மரணத்திற்குப் பின்பு "தேவனே இரட்சிப்பு" எனப் பொருள்படும் பெயரை மோசேயால் சூடப்பெற்ற யோசுவாவின் வழிநடத்துதலை ஏற்றுக் கொண்டார்கள். யோசுவாவுடன் தேவன் இருந்து, அவன் செய்வதெல்லாம் வாய்க்கப் பண்ணினார். தேவனை அவன் கனம்பண்ணியதால், அவர் அவனை மேன்மைப்படுத்தினார். இஸ்ரவேலர்களுக்காக யோர்தான் நதியை தேவன், ஒரு குவியலாக குவித்து, அதின் நீரோட்டத்தை தடுத்து வழி ஏற்படுத்தினார். அப்பக்கம் குவிந்து நின்ற நதி இப்பக்கம் காய்ந்திருந்ததால், அதில் கால் பதித்து, தேவனை துதித்து கரையேறினார்கள். அற்புதத்திற்கு அடையாளமாக பன்னிரண்டு கற்களை நினைவுச் சின்னமாய் எடுத்துக் கொண்டனர். கர்த்தருடன் கில்காலில் தங்களது உடன்படிக்கையைப் புதுப்பித்து, புத்துணர்வு பெற்று, புதுப்பொலிவுடன் எதிர்கொண்டனர் எரிகோவிற்கு.

கர்த்தர் ஜனங்களுக்கு கட்டளைகளை யோசுவாவின் மூலம் கொடுத்தார். அதில் ஒன்று "....எரிகோவும், அதில் உள்ள யாவும் கர்த்தருக்குச் சாபத்தீடாயிருக்கும்....." (யோசு. 6:17) என்பதாகும். தேவன் சொன்னபடி எரிகோவை அமைதலாய் சுற்றிவந்த இஸ்ரவேலர்கள் குறித்த நேரத்தில் எக்காள முழக்கமிட்டனர். எக்காள தொனி கேட்ட யெகோவா தேவன், எரிகோ கோட்டையை இடிந்து விழும்படி செய்தார். புற்றீசல் போல் கிளம்பிய இஸ்ரவேல் படையின் அடுத்த இலக்கு ஆயி பட்டணம். ஆனால் நடந்ததென்ன?....

வழக்கம்போல் வழிவிலகல், இட்ட கட்டளை மீறப்பட்டது. கண்களின் இச்சையால் கவர்ந்திழுக்கப்பட்டான் ஆகான் எனும் ஆகாதவன். பிதாவினால் உண்டாகாத இந்த இச்சை இவனை, கசை அடி தோளை சுண்டி இழுப்பதுபோல் வெகுவாய் இழுத்தது. சிக்கி பின்பு சீரழிந்தான். கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் தான் கண்டு, பின்பு அவை மீது மோகங்கொண்டு, தேவனின் கட்டளையை மீறி, ஆக்கினைத்தீர்ப்பை தன் தலையின் மேல் வாரிப்போட்டுக் கொண்டான். அவன் மாத்திரம் அழியவில்லை. அவனுக்குள்ளயாவும் அக்கினியில் அவிந்தது. (யோசுவா. 7:15,24,29)

எருசலேமிலே வெள்ளியைக் கற்களைப் போலவும், கேதுரு மரங்களை தானாகவே முளைக்கும்

சாதாரண காட்டத்திமரங்கள் போலவும் தான் இராஜாவாயிருந்தபோது அதிகமாக்கிய சாலோமோன் கூறுகையில், "பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்..." (நீதி.15:27) என்கிறார். எத்தனை உண்மை. மோகத்தால் வந்த மோசத்தைப் பார்த்தீர்களா, அன்பர்களே! பொருளாசை என்ற விக்கிரகாராதனையை இன்றோடு விட்டொழிப்போம். இல்லையென்றால் சாலமோனின் கூற்றுக்கேற்ப அது நமது பிராணனை வாங்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த வாலிப வயதில் அநீதிக்கு ஆசைப்படாமல், பலத்த கரங்களுக்குள் அடங்கி நடப்போம். ஏற்ற காலத்தில் நம்மை அந்த கரம் உயர்த்திப் பிடிக்கும்.

**ஒருவனின் கீழ்ப்படியாமையால் இஸ்ரவேலுக்கு போரில் படுதோல்வி:**

மலைபோலிருந்த எரிகோவை, தேவனின் உதவியோடு, எளிதாக வீழ்த்திய இஸ்ரவேலருக்கு ஆயிபட்டணம் ஒரு மடுவாகவே தெரிந்ததால் போகிற போக்கில் பட்டணத்து மகுடத்தை மடங்கடித்துவிடலாம் என மனப்பால் குடித்துவிட்டு, பட்டணத்திற்கு பட்டயத்துடன் பாய்ந்தோடிச் சென்றனர், பரமனின் பலம் தங்களோடு பதிவிருக்கிறது என்ற பரந்த எண்ணத்துடன். ஆனால், எதிரிகள் இஸ்ரவேலின் படையை பறக்கடித்தனர். ஐயகோ! முப்பத்தியாறு தலைகள் தரையில் உருண்டன. ஜெயமுரசு கொட்டுவோம் என எண்ணி வந்தவர்கள் புறமுதுகிட்டு, நாணி, தேனிக்கள் தன் கூட்டைவிட்டு கலைந்தோடுவது போல் சிதறி ஓடினர். கலக்கமுற சிதறி ஓடினவர்கள் தோல்வியின் காரணத்தைக் குறித்துக் துக்கத்துடன் சிந்திக்கலாயினர்.

ஆகான் செய்த அறிவீனமான காரியத்தால், படுதோல்வி பரிசாக வழங்கப்பட்டது என வெகுவாய் முயன்று கண்டுகொண்டனர். விளைவு, தேவன் குற்றவாளியை கூண்டோடு அழிக்க ஆணை பிறப்பித்தார். இவன் செய்த பாவத்தால், இவனோடிருந்த ஆடுகள், மாடுகள் கழுதைகள் மற்றும் தான் பெற்ற செல்வங்கள் அனைத்தையும் "பிரச்சனையின் பள்ளத்தாக்கு" என பொருள்படும் ஆகோர் பள்ளத்தாக்கிற்கு கொண்டு போகப்பட்டு, அவன் மேல் கல்லெறிந்து, பொருட்களை சுட்டெரித்து, கற்களினால் மூடினார்கள். அலங்காரமாய் இருக்கிறதென்று பொருள்களை

அபகரித்த ஆகானுக்கு கிடைத்ததோ அலங்கோல மரணம்.

பொருளைக் கையாடி, அதை குழிதோண்டி மூடிவைத்தால் தேவன் பார்க்கமாட்டார் என நினைத்து ஆகானின் நிலைமையைப் பார்த்தீர்களா! ஆஸ்தி என நினைத்து தடை செய்யப்பட்ட பொருட்களை அபகரித்தால், இந்த ஆகானின் பொருட்கள் எல்லாம் அஸ்தியானது. நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு பேருண்மை என்னவென்றால், இவனொருவனின் பாவத்தால், அப்பாவி மக்களில் முப்பத்தாறுபேர் மாண்டு மண்ணோடு மண்ணாக மக்கிப் போயினர். அவர்களின் குடும்பத்தைப் எண்ணிப் பாருங்கள். எழில்மிகு வீரர்கள் இந்த வீணனால் வீழ்ந்து போனார்கள். ஆகானின் அயலாருக்கு அவனால் இடுக்கண் வந்ததுதான் மிச்சம். "ஆகான்" என்ற பெயருக்கு அவன் **எதற்கும் ஆகான்** என்று தான் பொருளோ!! அதனால்தான் நமதாண்டவர் பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்று வெளிச்சமிட்டுக் காட்டுகிறார் (லூக். 12:15)

நாம் செய்யும் ஒவ்வொரு பாவமும், பிறரை பாதிக்கும் என்பதை அறிந்திருக்க வேண்டும். இவன் ஒருவன் செய்த பாவம் இஸ்ரவேலின் சபை முழுவதையும் தீட்டுப்படுத்தியதே, நாமும் இந்த வாலிப பருவத்தில் ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஏனென்றால் கர்த்தரின் சபை நம்முடைய பாவத்தால் தீட்டுப்படக் கூடாதே. யோனாவை நினைவிருக்கும் என நம்புகிறேன். அவனாலே கப்பலே கடுங்காற்றில் சிக்கிக் கொண்டது. இவன் செய்த தவறு பிறருக்கும் இன்னல் தந்ததை நினைவிற்கொள்வோம். இன்றும் நாம் செய்யும் ஒவ்வொரு தவறும், குடும்பமாகிய கப்பலில் பயணம் செய்யும் உறவுகளை கலங்கடிக்கும், மனநோவு ஏற்படுத்தும் என அறிந்து இந்த வாலிப நாட்களை விவேகமாய் நடத்துவோம். தேவனின் கட்டளையை துச்சமாய் எண்ணி, அதற்கு கீழ்ப்படியாததால் அழிந்தான் ஆகான் என்றால் அது மிகையாகாது. மரணத்தைதனக்கு தானே மாலையிட்டுக் கொண்ட மதிகெட்ட இவனைப் போலில்லாமல், உண்மையாய் இருக்கும் தேவனின் கட்டளைகளில் பிரியமாயிருந்து பாக்கிய வான்களாய் நம்மை தகுதிப்படுத்திக் கொள்வோமாக!! (சங்.111:7;112:1). •

**ஜே. பிக்கின்ஸ்**

# இயேசுவின் நாமம் . . . . .

இயேசு என்ற நாமத்தைக் கேட்டவுடன் அப். 3 : 6ல் அப்போஸ்தலனாகிய பேதுரு பேசிய வார்த்தைகள் நமது நினைவிற்கு வருகின்றது. பிறவியிலேயே சப்பாணியாய்ப் பிறந்து, தேவாலயத்தின் அலங்கார வாசலில் அமர்ந்து, பிச்சைகேட்ட ஒருவனை, பேதுரு தேவ வல்லமையால் சுகப்படுத்தினார். பேதுருவும், யோவானும் அடுத்த நாளில் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களை, அதிகாரிகள் மற்றும் பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டுவந்து ஆலோசனை சங்கத்தின் நடுவிலே நிறுத்தி, "நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு : "உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலேயே . . ." என்று பகிரங்கமாய் பதிலளித்தான்.

இந்த வேத பகுதியை நான் வாசிக்கையில் இப்படியாய் நினைக்காமல் இருக்கமுடியாது, "என்ன ஒரு அதிசயமான நாமம்" என்ன ஒரு அழகான நாமம், "என்ன வல்லமையான நாமம்". இன்றைய நாளில் சிலர் இயேசுவின் நாமத்தை (அதிகாரத்தை) தவிர்க்கிறார்கள் அல்லது குறைவாக மதிப்பிடுகிறார்கள். இந்த அபாயத்திலிருந்து என்னை இந்த வசனம் தப்புவிக்கிறது. இன்னும் சிலர் "நாமத்தில் என்ன இருக்கிறது" என வாக்குவாதம் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மனநிலை கொண்டவர்கள் இந்த பிரச்சனைக்கு வேதாகமம் அநேக இடங்களில் பதிலளிக்கிறதை அறியாதவர்களாய் இருக்கிறார்கள். இது போன்ற வேத வசனங்களை நமக்கு மாத்திரமல்ல, பிறருக்கும் அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும்.

இயேசுவுக்கு பிரியமான அப்போஸ்தலனாகிய யோவான், அவர் எழுதின சுவிசேஷ புத்தகத்தின் அடிப்படை நோக்கத்தை கூறுகையில் "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது". (யோவா. 20 : 31) என்கிறார். ஆகவே நமக்கு நித்திய ஜீவன் என்பது இயேசு கிறிஸ்துவின் மூலம் மாத்திரம் கிடைக்கிறது. இப்படிப்பட்டதைக் குறித்து நாம் "அதில் என்ன இருக்கிறது" என்ற மனப்பான்மை கொண்டவர்களாயிருக்கலாகாது. லூக்கா இதைக் குறித்து கூறுகையில் "அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" என்கிறார். (லூக். 24 : 47). அப்போஸ்தலனாகிய பவுல்

கூறுகையில், "கிறிஸ்துவின் நாமம் நம்மை நீதிமான்களாக்குகிற வல்லமை வாய்ந்தது" என்கிறார். (1. கொரி. 6 : 11). இதைவிட மனிதகுலத்துக்கு முக்கியமானதாக எது விளங்கமுடியும்?

இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்த மற்றொரு பேருண்மை என்னவெனில், அந்த நாமத்திற்காக சிலவேளை நாம் துன்பங்களையும் அனுபவிக்க கூடும் என்று வேதாகமம் பறைசாற்றுகிறது. (அப். 5 : 41.) ஆலோசனை சங்கத்தால் அடிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள், "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப் பட்டபடியினால் சந்தோஷப்பட்டார்கள்" என அறிகிறோம். கிறிஸ்துவும் இவ்வுலக மக்களுக்காக போதிக்கையில், "என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் . . ." (மத். 10 : 22.) என்றார். இயேசுவின் நாமத்தை உறுதியாய் பற்றியவனும், விசுவாசத்தை மறுதலியாதவனுமாகிய அந்திப்பா கொலை செய்யப்பட்டான் என்றும் வாசிக்கிறோம். (வெளி. 2 : 13). இப்படி நாம் அனுபவிக்கிற துன்பங்கள் எல்லாம் வீணாய் போய்விடாது. பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" (ரோமர். 8 : 18).

நாம் கூடிவரவேண்டியது அவருடைய நாமத்தில்தான் என்பதை வேதாகமம் தெளிவாய் போதிக்கிறது. (மத். 18 : 20). அவருடைய நாமம் தூஷிக்கப்படலாகாது. (யாக். 2 : 7). மாறாக அது மகிமைப்படுத்தப்பட வேண்டும். (கொலோ. 3 : 17). ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுக்கிறிஸ்து, கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலி. 2 : 9 - 11).

அவருடைய நாமத்தினால் இரட்சிப்பு நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இயேசுவின் நாமம் முக்கியமானது மாத்திரமல்ல. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை. அவருடைய நாமத்தை துதிக்க நமக்கு எத்தனை சுதந்திரம். அவருடைய நாமத்தை தரித்துக் கொள்வதில் எத்தனை மதிப்பு. அவருடைய நாமத்திற்குள் பாதுகாப்பாய் இருப்பதில் எத்தனை ஆசீர்வாதம். இன்றைய உலகில் ஒரு மில்லியன் மக்களுக்கு மேல் இயேசுவின் நாமத்தைக் கேட்டதே இல்லை என்பதில், எவ்வளவு வெட்கமாய் இருக்கிறது. நாம் தைரியமாய் அவரின் நாமத்தை பலருக்கு தெரிவிக்கவும், அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவும், தேவன் நம்மை பெலப்படுத்துவாராக!

KIN ROWELL

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | |
|---|---|
| **HINDI** : | Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** : | Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** : | Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** : | Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** : | Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN / ERD / WD / PP/5
Posted at Erode HPO on 20, JUNE 99
JUNE 99 THIRUMARAI AASAAN Regd. No. TN / ERD / 49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இவவசப் பயிற்சி, இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு "**சான்றிதழ்**" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண். 27, காங்கயம் – 638 701.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM.

PRINTED MATTER

TO

BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph:04257 - 20030.